மலேசிய கிறிஸ்துவ கூட்டமைப்பு
பெர்செக்கெத்துவான் கிறிஸ்டியன் மலேசியா
(PPM-003-10-14011086)
முகவரி: 26 ஜலான் யுனிவர்சிட்டி, 46200-பெட்டாலிங் ஜெயா, சிலாங்கூர், டாருல் எசான், மலேசியா
தொலைபேசி: /தொலை நகல்: + 603 7957 1457
மின்னஞ்சல்: cfmsia@yahoo.co.uk

26 ஏப்ரல் 2018

முழு அறிக்கை:
மலேசியாவின் 14 ஆவது பொது தேர்தலை முன்னிட்டு மலேசிய கிறிஸ்துவ கூட்டமைப்பின் அறிக்கை

சிறந்த மலேசியாவை உருவாக்க, விவேகத்தோடு வாக்களிப்போம்.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மலேசியர்களுக்கு தங்களுடைய அரசாங்கத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. திருச்சபை எந்த தனிப்பட்ட கட்சியையும் சாராதது . ஆனால் கிறிஸ்துவர்களாக இருக்கும் மலேசிய குடிமக்களாகிய நாம், வருகின்ற 14 ஆம் பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் பொறுப்பை நம்முடைய தார்மீகக் கடமையாகக் கொண்டுள்ளோம்.

(தொடக்க நூல் /ஆதியாகமம் 1:28) படைப்புகளை ஆளும் அதிகாரத்தை இறைவன் மனிதனுக்கு வழங்கினார். மேலும் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேர்ந்தெடுக்கும் முழு உரிமை தந்தார். ஒவ்வொன்றையும் தேர்ந்தெடுக்க நம்மைச் சுற்றியுள்ள படைப்புகள் அனைத்தும் நமக்கு விவேகத்தைத் தருகிறது. அதன் தொடர்ச்சியாக நல்லவையோ கெட்டவையோ, அதனுடைய விளைவுகளை நாம் அனுபவிக்க வேண்டும். ஒரு சமூகமாக நமக்குத் தேர்ந்து தெளியும் திறன் வழங்கப்பட்டுள்ளது. எனவே, நம்மை வழிநடத்தும் , அரசியல் தலைவர்களை நாம் விவேகத்தோடு தேர்ந்தெடுக்க வேண்டும். ஏனென்றால் நேர்மையானவர்கள் அதிகாரத்தில் இருந்தால் மக்களும் மகிழ்ச்சியுறுவர். ( நீதிமொழிகள்: 29:2) "நேர்மையானவர்கள் ஆட்சி செலுத்தினால், குடிமக்கள் மகிழ்ச்சியுடனிருப்பார்கள்; பொல்லார் ஆட்சி செலுத்தினால் அவர்கள் புலம்பிக் கொண்டிருப்பார்கள்'. எதிர்வரும் 14 ஆம் பொதுத்தேர்தலை தூயஆவிக்குள் முறையாகச் செயல்படுத்தினோமென்றால் நாம் வெற்றியும் மகிழ்ச்சியும் அடைவோம்.

அ) பகுத்தறிதல்

கடவுள் கட்டளையிட்டவாறு, நாம் புரிந்துணர்வு பெற்று விவேகத்தோடு பகுத்தறிவைத் தேடவேண்டும் (இணைச்சட்டம் / உபாகமம்: 32:28-29). சரி எது, தவறு எது, என்று பகுத்தறியும் திறனை மேம்படுத்திக்கொள்ளவும், அடுத்த ஐந்தாண்டுகளுக்கு ஆட்சி செய்யப்போகும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் சட்டப் பேரவை பிரதிநிதிகளையும் சரியாகத் தேர்ந்தெடுக்கும் விவேகத்தையும் பெற்றுக்கொள்ள ஆண்டவரிடம் மன்றாடுவோம். இதைச் செயல்படுத்த, வேட்பாளர்களைக் கேள்வி கேட்க வேண்டும். அவர்களுடைய கொள்கைகள் மற்றும் நிலைப்பாட்டை மற்றவர்களோடு ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும். சட்ட விதிமுறைகள், கூட்டாட்சி அரசியலமைப்பு மற்றும் பொது நலனைப் பாதுகாக்கும் உரிமைகள் ஆகியவற்றைப் பற்றிக் கவனமாக ஆராய வேண்டும் (சமய சுதந்திரம்). பொது நலனை முன்னிட்டு ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களை உள்ளடக்கிய அனைவரின் நலன்களையும் ஊக்குவிக்குப்பதற்காகவும், அக்கறையுடனும் பொறுப்புணர்வுடம் செயல்பட அவர்கள் விருப்பம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். வேட்பாளர்கள் அனைவரும் அவர்கள் தரும் வாக்குறுதியை நிறைவேற்றும் மற்றும் அதன்படி நடப்பவர்களாகவும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

ஆ)ஒற்றுமை

பல இனம் மற்றும் பல சமயங்களைக் கொண்ட சமுதாயமாக இருப்பதால், எப்போதும் இல்லாத அளவுக்கு அரசியல் சட்டத்தின் மேல் அடித்தளமிட்ட தேசமாக நாம் எப்போதும் இருக்க வேண்டும். "பிறர் உங்களுக்கு செய்ய வேண்டுமென்று விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத்தேயு: 7:12). அனைத்து இனம், சமயம் , பாலினம், சமுதாய பொருளாதார ஏற்றத் தாழ்வு, வேற்றுமை பாராமல் அனைவரையும் இணைக்கும் விதமாக ஒருவருக்கொருவர் பாலம் அமைக்க வேண்டும். கடவுள் அன்பும், பிறர் அன்பும் வேரூன்றிய தேசமாக நாம் இருந்தால் (மத்தேயு 22:36-40) நம்முடைய நாட்டின் தலைவர்களும் ஒற்றுமை, அமைதி , தேசிய ஒற்றுமை ஆகியவற்றைச் செயல்படுத்த ஊக்குவிக்க வேண்டும்.

இ) செபம்

தெசலோனிக்க மக்களிடம் பவுலடிகளார் கூறுகிறார் "இடைவிடாது செபியுங்கள்" (1 தெச 5:17) கிறிஸ்துவர்களுக்கு செபம் இன்றியமையாதது. நேர்மையோடும், துணிவோடும் மக்களுக்குப் பணி செய்யும் கடவுளின் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் வல்லமையைத் தருமாறு தூய ஆவியாரிடம் மன்றாடுவோம். நாமும் நம்முடைய மனசாட்சியின்படி துணிவோடு வாக்களிக்க முன்வருவோம். அனைத்து அதிகாரமும் கடவுளால் அருளப்பட்டது. நம்முடைய நீதியின்படி நாம் தேர்ந்தெடுத்த தலைவர்கள் எடுக்கும் அனைத்து முடிவுகளுக்கும், செயல்களுக்கும் நாம் தான் பொறுப்பேற்க வேண்டும். மலேசிய நாட்டின் 14 ஆவது பொதுத்தேர்தல் மக்களின் முழு சுதந்திரத்தோடும், நேர்மையோடும் நியாயத்தோடும் நடைபெறவும், இதனால் அடுத்து அமையவிருக்கும் அரசாங்கம் அமைதியாகவும், மென்மையானதாகவும் உற்சாகம் நிறைந்ததாகவும் அமைய ஆசீர்வாதத்தை வேண்டுவோம்.

மலேசிய கிறிஸ்துவப் பேரவையில் உள்ள அனைத்து கிறிஸ்துவ சபைகளும், அமைதி மற்றும் நியாயமான பொதுத் தேர்தல் நடைபெற ஒரே மனதாக செபிப்போம். நம்முடைய தேசத்தைப் பாதிக்கும் பிரச்னைகளை அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் முன்வைத்து, அன்பான நம் நாட்டின் மக்களைப் பிரிக்கும் பிளவுகள், வன்முறைகள், கருத்து வேறுபாடுகள் ஆகியவற்றை உருவாக்குகின்ற அனைத்து சக்திகளில் இருந்தும் விலகிச் செல்லுமாறு அவர்களுக்கு அழைப்பு விடுப்போம்.

மலேசிய நாட்டின் 14 ஆவது பொதுத் தேர்தலை ஆண்டவரின் கரங்களில் ஒப்படைக்கிறோம். "என் கடவுளே, உம்மில் நம்பிக்கை வைக்கிறேன்: (திருப்பாடல்/சங்கீதம்: 25:1-2)

கையொப்பம்

பேராயர் ஜூலியன் லியாவ் பெங் கிம்
தலைவர்

பேராயர் சைமன் போ கூன் செங்
துணைத்தலைவர்

ஆயர் டாக்டர் ஓங் குவாய் தேய்க்
துணைத்தலைவர்

போதகர் டாக்டர் யூ ஹாங் செங்
துணைத்தலைவர்